# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)

## இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2018**

## C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. குறியீடு என்றால் என்ன?
2. இலக்கண வழக்கு எத்தனை வகைப்படும்? அவையாவை?
3. கவிதை என்பது மெய்ம்மையின் நகல் என்று கூறிய அறிஞர் யார்?
4. இந்தியாவிலேயே மிகப்பெரிய அகழ்வாராய்ச்சியின் பெயர் என்ன?
5. தாழிகளை எதற்குப் பயன்படுத்தினர்?
6. பதிற்றுப்பத்தில் எந்த அரசர்களைப் பற்றி பாடப்பட்டுள்ளது?
7. திருவள்ளுவர் குறிக்கும் இசைக்கருவிகள் யாவை?
8. பெரியாழ்வார் கனவில் திருமால் என்ன கூறினார்?
9. சமணர்கள் செய்த தானங்களைக் குறிப்பிடுக.
10. இசுலாம் என்பதன் பொருள் யாது?
11. நாயக்கர் கால சாதிப்பிரிவுகள் யாவை?
12. மீனாட்சியம்மைப்பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?
13. திரு.வி.க. நடத்திய பத்திரிக்கைகள் யாவை?
14. வீரர்களைப் புதைத்த இடத்திற்குப் பெயர் என்ன?
15. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து விணாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. பண்பாட்டுக் கூறுகள் என்றால் என்ன?
2. மொழிக்கு பாவாணர் கூறும் விளக்கம் யாது?
3. உறையூர் பற்றி குறிப்பு வரைக.
4. மடலேறுதல் என்றால் என்ன?
5. கல்வெட்டுகள் மூலம் அறியப்படும் செய்திகள் யாவை?
6. தமிழர் வாழ்வில் இடம்பெற்ற விருந்தோம்பல் குறித்து எழுதுக.
7. ஏழு சுவரங்களுக்குரிய தமிழ்ப் பெயர்களைக் கூறுக.
8. நடுகல் – சிறுகுறிப்பு வரைக,

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்நாட்டின் நிலம் சார்ந்த வாழ்வியல் முறை குறித்து எழுதுக.

2. (அ) பழமொழி காட்டும் பண்பாடு குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கிறித்தவம் தமிழுக்குச் சேர்த்த வளத்தினை சான்றுடன் விவரிக்க.

3. (அ) தமிழகத்தில் இந்திய விடுதலை உணர்வை விதைத்தவர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நீர்நிலைகள் குறித்து கல்வெட்டின் வழி அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க.

* * *